மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கல்குளம் மாத்திரம் அல்ல. பல்வேறு வட்டங்களைப் பிரிக்கவேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : கல்குளம் வட்டத்தில் இப்போது பத்மனாபபுரம் தலைநகரமாக இருக்கிறது. இரணியல் பிரிக்கப்பட இருக்கிறது. இரணியலுக்கும் தற்போதைய தலைநகரத்திற்கும் மூன்று மைல் தூரம்தான். பத்மனாபபுரத்திற்கு வடபகுதியில்தான் கல்குளத்தின் பெரும்பகுதியும் இருக்கிறது. ஆகவே, அப்பகுதியின் மத்தியிலிருக்கும் குலசேகரத்தை தலைநகரமாகக் கொண்டு ஒரு வட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அது திரு. ஜேம்ஸ் அவர்கள் தொகுதியாக இருக்கும் என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட முறையீடு குளச்சலில் இருந்தும் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். திங்கள் சந்தை ஊராட்சி ஒன்றியம் கூட இது பற்றி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பி இருக்கிறது. ஆகவே இது பற்றி பல்வேறு பிரச்னை இருப்பதால் அது பற்றி அரசு ஆராய்ந்து கொண்டு இருக்கிறது என்று சொன்னேன்.

நரிக்குறவர்களுக்கு வீட்டு மனைகள்.

* 257 வினா : திரு. த. சோனையா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் எங்கெங்கு நரிக்குறவர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்பத்தூர் வட்டம், திருப்பத்தூர் கிராமம், புல எண். 300/7-ல் உள்ள 93 செண்டு நிலத்தை தலா மூன்று செண்டு வீதம் 31 நரிக்குறவர்களுக்கும், சிவகெங்கை வட்டம், பாயூர்பிள்ளவயல், கிராமம் புல எண் 104/2-ல் உள்ள 1.86 ஏக்கர் நிலத்தை தலா மூன்று செண்டு வீதம் 62 நரிக்குறவர்களுக்கும் ஒப்படை செய்யப்பட்டுள்ளன.

மீனவர்களுக்கு வீடுகள்.

* 258 வினா : திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

பூம்புகார் கடல் ஓரப்பகுதியில் மீனவர்களுக்கு பல மாடிக் குடியிருப்புக்கள் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பூம்புகார் கடல் ஓரப்பகுதியில் மீனவர்களுக்கு பல மாடிக் குடியிருப்புக்கள் கட்டித் தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை. எனினும் வீட்டு வசதி